சுருக்கம்

2005 ஆம் ஆண்டைய பேரிடர் மேலாண்மைச் சட்டம் – 2021 ஆம் ஆண்டில் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி நடத்த சில கட்டுப்பாடுகளுடன் அனுமதி மற்றும் நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பே.மே. 4)த் துறை**

அரசாணை (நிலை) எண்.795

நாள்: 26.12.2020
சார்வரி, மார்கழி 11
திருவள்ளுவர் ஆண்டு – 2051

படிக்க:-

1. அரசாணை (நிலை) எண்.7 கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை நாள் 21.1.2017
2. முதன்மைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை நேர்முகக் கடித எண்.19900/HAH3/2020, நாள் 24.12.2019
3. அரசாணை (நிலை ) எண்.673 வருவாய் மற்றும் பேரிடர்மேலாண்மை (பே.மே.4)த்துறை நாள் 30.11.2020
4. அரசு செய்தி வெளியீடு எண்.992, நாள் 23.12.2020

•••••••

**ஆணை:**

கோவிட்–19 நோய் தொற்று பரவலை கட்டுப்படுத்துவது தொடர்பாக மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மருத்துவ நிபுணர்களின் கருத்துக்களின் அடிப்படையில் பல்வேறு தளர்வுகளுடன் ஊரடங்கு 31.12.2020 வரை நீட்டிப்பு செய்து மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. ஜல்லிக்கட்டு விளையாட்டின் பாரம்பரியம் மற்றும் பண்பாட்டைப் பாதுகாக்க, தமிழ்நாட்டில் மக்கள் பெருமளவு மகிழ்ச்சியோடு பங்கு பெற்று வருகின்றனர். நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டு, 2017 முதல் ஜல்லிக்கட்டு நடத்தப்பட்டு வருகிறது. ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி என்பது காளைகள் மற்றும் மாடு பிடிப்பவர்கள் நேரடியாக கலந்து கொள்வது மட்டும் அல்லாமல் பொதுமக்களும் பங்கேற்கும் நிகழ்ச்சியாகும்.

3. ஏற்கனவே ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு வெளியிடப்பட்டுள்ள நிலையான வழிகாட்டு நெறிமுறைகளுடன், தற்போது கோவிட்– 19 தொற்று காரணமாக, எதிர்வரும் 2021–ஆம் ஆண்டில், ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி நடத்த கீழ்க்கண்ட கட்டுப்பாடுகளுடன் மேலே நான்காவதாக படிக்கப்பட்ட செய்தி வெளியீட்டில் அரசு அனுமதி அளித்துள்ளது.

4. மேற்கண்ட செய்தி வெளியீட்டின் அடிப்படையில் ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு வெளியிடப்பட்டுள்ள நிலையான வழிகாட்டு நெறிமுறைகளுடன் தற்பொழுது கோவிட்–19 தொற்று காரணமாக எதிர்வரும் 2021–ஆம் ஆண்டில் ஜல்லிக்கட்டு நடத்த கீழ்க்கண்ட கட்டுப்பாடுகள் மற்றும் நிலையான வழிகாட்டு நெறிமுறைகளுடன் அரசு அனுமதி அளிக்கிறது.

- ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு மற்றும் வடமாடு நிகழ்ச்சிகளில் மாடுபிடி வீரர்கள் 300 நபர்களுக்கு மிகாமல் கலந்து கொண்டு நிகழ்ச்சி நடத்த அனுமதிக்கப்படுகிறது.
- எருது விடும் நிகழ்ச்சியில் 150 வீரர்களுக்கு மிகாமல் கலந்து கொண்டு நிகழ்ச்சி நடத்த அனுமதிக்கப்படுகிறது.
- மேற்கண்ட நிகழ்ச்சிகளில் திறந்த வெளியின் அளவிற்கேற்ப (Total Capacity) சமூக இடைவெளியை கடைபிடிக்கும் வகையில், அதிகபட்சம் 50 சதவிகித அளவிற்கு மிகாமல் பார்வையாளர்கள் கலந்து கொள்ளவும் அனுமதிக்கப்படுகிறது. பார்வையாளர்களுக்கு வெப்ப பரிசோதனை (Thermal Scanning) செய்த பிறகே அனுமதிக்க வேண்டும்.
- ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியில் மாடுபிடி வீரர்களாக பங்கேற்பவர்கள் அரசால் அங்கீகரிக்கப்பட்ட பரிசோதனை கூடத்தில் கோவிட்–19 தொற்று இல்லை என சான்று பெற்றிருக்க வேண்டும்.
- மேலும் நிகழ்ச்சியில் பார்வையாளர்களாக பங்கேற்கும் அனைவரும் முகக்கவசம் அணிவதும் மற்றும் தனிமனித இடைவெளியை கடைபிடிப்பதும் கட்டாயமாக்கப் படுகிறது.

**<u>கோவிட் – 19 நோய் தொற்று பரவலை கட்டுப்படுத்த பின்பற்றப்பட வேண்டிய நிலையான வழிகாட்டு நெறிமுறைகள்</u>**

1. ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகளில் காளைகளின் உரிமையாளர்கள் மற்றும் அவர்களை சார்ந்தவர்களும் பெரும் பங்கு வகிப்பதால், ஒரு காளையுடன் சுமார் 5 முதல் 6 நபர்கள் வருவது வழக்கம். இதனை கட்டுப்படுத்தி ஒரு காளையுடன் ஒரு உரிமையாளர் மற்றும் காளையுடன் நன்கு பழக்கமுள்ள ஒரு உதவியாளர் மட்டுமே அனுமதிக்கலாம். காளையின் உரிமையாளர் மற்றும் அவரது உதவியாளருக்கு மாவட்ட நிர்வாகத்தின் மூலம் அடையாள அட்டை வழங்கப்படும். மேலும், அடையாள அட்டை இல்லாத நபர்கள் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி நடைபெறும் வளாகத்திற்குள் நுழைய அனுமதி இல்லை.
2. காளைகளை பதிவு செய்யும் பொழுது அக்காளையின் உரிமையாளர் மற்றும் உடன்வரும் உதவியாளர் ஆகியோரும் பதிவு செய்தல் வேண்டும். ஜல்லிக்கட்டில் பங்குபெறும் காளைகளின் பதிவு, நிகழ்ச்சி நடைபெறுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பே முடிக்கப்பட வேண்டும். மேலும், காளையின் உரிமையாளர் மற்றும் உடன் வரும் உதவியாளர் கோவிட்–19 பரிசோதனை செய்து, தொற்று இல்லை என சான்று பெற்றிருக்க வேண்டும்.
3. ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு மற்றும் வடமாடு நிகழ்ச்சிகளில் மாடுபிடி வீரர்கள் 300 நபர்களுக்கு மிகாமல் கலந்து கொண்டு நிகழ்ச்சி நடத்த அனுமதிக்கப்படுகிறது.
4. எருது விடும் நிகழ்ச்சியில் 150 வீரர்களுக்கு மிகாமல் கலந்து கொண்டு நிகழ்ச்சி நடத்த அனுமதிக்கப்படுகிறது.
5. ஜல்லிக்கட்டில் பங்குபெறும் வீரர்களுக்கு, நிகழ்ச்சி நடைபெறும் நாளுக்கு 7 நாட்கள் முன்பாக பதிவு செய்யப்பட்டு மாவட்ட நிர்வாகத்தின் மூலம் அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும். மேலும் அடையாள அட்டை இல்லாத நபர்கள் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி நடைபெறும் வளாகத்திற்குள் நுழைய அனுமதி இல்லை.

6. ஜல்லிக்கட்டில் பங்குபெறும் வீரர்களுக்கு அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வுக்கூடங்களில் கொரோனா தொற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, தொற்று இல்லை என்று நிகழ்ச்சி நடைபெறும் இரண்டு நாட்களுக்கு முன்பு சான்று பெறப்பட்டவர் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

7. தமிழ்நாடு அரசினால் வெளியிடப்படும் கொரோனா தடுப்பு நடவடிக்கை நடைமுறைகளை பின்பற்றி பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள். இந்நடைமுறைகளை மீறுபவர்கள் உடனுக்குடன் ஜல்லிக்கட்டு வளாகத்திலிருந்து வெளியேற்றப்படுவார்கள்.

8. ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியை மேற்பார்வை செய்யும் அனைத்துத்துறை அலுவலர்களும், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்களும் கோவிட்–19 பரிசோதனை செய்து, தொற்று இல்லை என சான்று பெற்றிருக்க வேண்டும்.

9. அனைத்து துறை அலுவலர்களும், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்களும் மற்றும் பார்வையாளர்களும் அரசினால் அறிவுறுத்தப்பட்ட நடைமுறைகளை பின்பற்ற வேண்டும்.

5. ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகள் நடத்த அரசின் முன் அனுமதி பெற்று பிராணிகள் வதை தடுப்பு (ஜல்லிக்கட்டு நடைமுறை) விதிகள், 2017, அரசினால் வெளியிடப்பட்டுள்ள ஜல்லிக்கட்டு நடத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் ஆகியவற்றுடன் அரசினால் விதிக்கப்படும் கொரோனா தடுப்பு கட்டுப்பாடுகள் அனைத்தும் பின்பற்றப்பட வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.சண்முகம்
அரசு தலைமைச் செயலாளர்.

பெறுநர்
கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர்,
சென்னை 600 005
முதன்மைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும்
மீன்வளத்துறை, சென்னை 600009
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை

**<u>நகல்</u>**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை 9
சிறப்பு முதுநிலை நேர்முக உதவியாளர், வருவாய்மற்றும் பேரிடர் மேலாண்மை
மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை 9
முதுநிலை தனிச் செயலாளர், தலைமைச்செயலாளர் அலுவலகம், சென்னை 9

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

24/12/2020

பிரிவு அலுவலர்